17th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A land colonisation co-operative society for the benefit of ex-servicemen was organised in the Jambuvanodai village. The society was registered on 15th August 1952 and started on its work on 20th August 1952.

(c) There are 120 members on the rolls of the society with a paid up share capital of Rs. 30,000 (contributed by members). The extent of lands alienated by Government to the society was 742·65 acres.

திரு. சி. ம. அம்பிகாபதி: மாஜி ராணுவத்தினர்களுக்கு அளிக்கப்பட்ட நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் கொடுத்த மான்யத் தொகை எவ்வளவு என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய சர்க்காரிலிருந்து சாங்ஷன் செய்தது 90 ஆயிரம் ரூபாய். ராஜ்ய சர்க்காரிலிருந்து சாங்ஷன் செய்தது 60 ஆயிரம். "போஸ்ட்வார் சர்வீசஸ் ஃபண்ட்"டிலிருந்து கொடுத்தது 60 ஆயிரம். இதில் அவர்கள் மத்திய சர்க்காரிலிருந்து கொடுத்ததில், 61,094 ரூபாயையும், ராஜ்ய சர்க்காரிலிருந்து 60 ஆயிரத்தையும், போஸ்ட்வார் சர்விஸ் ஃபண்டிலிருந்து கொடுக்கப்பட்ட 60 ஆயிரத்தையும் உபயோகப் படுத்தியிருக்கிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர்: மத்திய சர்க்காரினால் கொடுக்கப் பட்ட தொகை பூராவும் செலவு ஆகாத காரணம் என்ன? விண்ணப்பங்கள் அதிகம் வரவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது ஒரு சொஸைட்டிக்கு கொடுக்கப்பட்டது. எவ்வளவு தேவையோ அவ்வளவு அவர்கள் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.

Electricity for Agriculture

* 496 *Q*.—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Central Government has urged the State Government to reduce the rates of electricity for agricultural purposes; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) No. communication on the subject has been received by us from the Central Government.